**சார்பு நீதிமன்றம், சத்தியமங்கலம்**

**MCOP.No.413/2018**

2024-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 25-ஆம் நாள் **ம.சா.2** சாட்சி **திரு.பூபதி** என் முன் சாட்சியாக விசாரிக்கப்படுபவர். 1969ம் ஆண்டு 24வது சட்டப்பிரிவு 4(1) ஏற்பாட்டின்படி **உயர்திரு.என்.ஷர்மிளா, பி.ஏ., பி.எல்.,** சார்பு நீதிபதி, சத்தியமங்கலம் அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : **திரு.பூபதி** | வயது | : |
| த/பெ | : | சாதி | : |
| கிராமம் | : | சமயம் | : |
| தாலுக்கா | : | தொழில் | : |

**ம.சா.2 : முதல் விசாரணை:**

நான் இவ்வழக்கில் சாட்சி ஆவேன். என் தரப்பில் சாட்சியமாக விசாரணை செய்ய பிரமாணவாக்குமூல பத்திரம் தாக்கல் செய்துள்ளேன். மேற்படி பிரமாணப்பத்திரிக்கையில் கண்டுள்ள சங்கதிகளை அறிவேன். எனது நிரூபண வாக்குமூலத்தை முதல் விசாரணையாக ஏற்ககோருகிறேன்.

**ஆவணங்கள் குறியீடு இல்லை**

சார்பு நீதிமன்றம், சத்தியமங்கலம், நாள்:25.10.2024

**2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை:**

விபத்தில் இறந்தவரும் நானும் ஒரே ஊர் என்றால் சரிதான். 20 வருடத்திற்கு மேலே இறந்தவரைத் தெரியும் என்றால் சரிதான். விபத்து நடந்த நேரம் இரவு நேரம் என்றால் சரிதான். நானும் அந்த ஆட்டோவில் பயணம் செய்தேனா என்றால் இல்லை. அந்த வழியே போக்குவரத்து நெரிசல் இருந்ததா என்றால் நான் விபத்தை நேரில் பார்க்கவில்லை. விபத்து குறித்து போலீசார் என்னை விசாரித்தார்களா என்றால் விசாரிக்கவில்லை. எனக்கு இறந்தவர் இருபது ஆண்டுகளாக தெரியும் என்பதால் என்னை நேரில் பார்த்த சாட்சியாக பொய்யாக தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

திறந்த நீதிமன்றத்தில் என்னால் அழைக்கப்பட்டு சாட்சியிடம் படித்து விளக்கமளித்து, அவர் சரியானவை என்று ஒப்புக் கொண்டு என் முன்பாக கையொப்பம் செய்தார்.

சார்பு நீதிபதி,
சத்தியமங்கலம்.